**செய்தி வெளியீடு எண்.525** **நாள்— 24.8.2009**

## சட்டப்பேரவை உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று பல்வேறு சம்பவங்களில் உயிரிழந்த 17 பேரின் குடும்பங்களுக்கு மொத்தம் 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி !

# முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தாராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி. பிரபாவதி பெரியசாமி அவர்களின் கோரிக்கையை ஏற்று, திருப்பூர் மாவட்டம், மஜரா காட்டம்மன்புதூர் பி.கே.பி. பிரிக்ஸ் செங்கல் சூளையில் பணிபுரிந்து வந்த உடுமலைப்பேட்டை, கடத்தூர்புதூரைச் சேர்ந்த முருகன் என்பவரின் மனைவி ஆராத்தாள், மகள் அனிதா, சீர்காழி வட்டம், ஏத்தக்குடியைச் சேர்ந்த அருணாசலம் என்பவரின் மகன் செல்லையன் என்ற செல்வம் ஆகிய மூவரும் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததால் ஆராத்தாள், அனிதா ஆகியோருக்காகத் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் அவர்களின் வாரிசுதாரராகிய திரு. முருகனுக்கு 1 லட்சம் ரூபாய்; செல்லையனின் மனைவி திருமதி ஜானகிக்கு 50 ஆயிரம் ரூபாய் ஆக மொத்தம் 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ;

பனமரத்துப்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. இரா.இராஜேந்திரன், கோரிக்கையை ஏற்று சேலம் மாவட்டம், உடையார்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. குமார் என்பவரது மகன் கே. பிரகாஷ் என்ற சிறுவனும், அம்மாபேட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜா என்பவரின் மகன் சந்திரன் என்ற சிறுவனும் உடையார்பட்டி கன்னிமார் ஓடையில் குளிக்கச் சென்றபோது, தவறி விழுந்து நீரில் மூழ்கி இறந்ததால் பிரகாஷின் தந்தை திரு. குமார் மற்றும் சந்திரனின் தந்தை திரு. ராஜா ஆகியோருக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் 1 இலட்சம் ரூபாய் ;

வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.வீரபாண்டி ஆறுமுகம் கோரிக்கையை ஏற்று சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்டமேட்டுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. செந்தில்குமார் என்பவரது மூத்த மகன் இளங்கோ என்பவர் கிணற்றில் தவறி விழுந்து இறந்ததால் அவரது தந்தை செந்தில்குமாருக்கு 50 ஆயிரம் ரூபாய் ;

பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. மகேந்திரன் அவர்களின் கோரிக்கையை ஏற்று திருவள்ளூர் மாவட்டம், மூலச்சத்திரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணமூர்த்தி என்பவரின் இரண்டு மகன்கள் ஜெகன் (வயது 17), மோகன் (வயது 15) ஆகியோர் புழல் ஏரியில் மூழ்கி இறந்ததால் இருவருக்காகவும் அவர்களின் தந்தை திரு. கிருஷ்ணமூர்த்திக்கு 1 லட்சம் ருபாய்;

மயிலாடுதுறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ராஜகுமார், கோரிக்கையை ஏற்று நாகப்பட்டினம் மாவட்டம், 68, செருதியூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மு. பாலமுருகன் என்பவரின் மகன் சக்தீஸ்வரன் (வயது 3) என்ற சிறுவன், மின்சாரம் தாக்கி இறந்ததால் அவரது தந்தை பாலமுருகனுக்கு 50 ஆயிரம் ரூபாய் ;

கிருஷ்ணராயபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. காமராஜ், கோரிக்கையை ஏற்று கரூர் மாவட்டம், சென்னம்பட்டியைச் சேர்ந்த முனியப்பன் என்பவரது மகன் பாலசுப்பிரமணியன் என்ற சிறுவன் டயர் மாட்டு வண்டியில் சிக்கி இறந்ததால் அச்சிறுவனின் தந்தை திரு. முனியப்பன் என்பவருக்கு 50 ஆயிரம் ரூபாய்;

தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.ராஜா கோரிக்கையை ஏற்று காஞ்சிபுரம் மாவட்டம், கோவிலம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. குப்பன் என்பவரின் மகன் சிவசங்கர், சுண்ணாம்பு கொளத்தூர், ராஜராஜேஸ்ரி நகரைச் சேர்ந்த சண்முகம் என்பவரின் மகன் அரிதாஸ் ஆகியோர் சுண்ணாம்பு கொளத்தூர் பெரிய ஏரியில் குளிக்கும் போது நீரில் மூழ்கி இறந்ததால் சிவசங்கரின் வாரிசுதாரராகிய திரு. குப்பன் என்பவருக்கு 50 ஆயிரம் ரூபாய், அரிதாஸ் என்பவரின் வாரிசுதாரரான சண்முகத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் ஆக மொத்தம் 1 லட்சம் ரூபாய் ;

முதலமைச்சர் அலுவலகத்தில் பெறப்பட்ட மூன்று மனுக்களின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில்,

தஞ்சாவூர் மாவட்டம், தாமரங்கோட்டை தெற்கு கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலசுப்ரமணியன் என்பவரின் மகள் பவானி வாகனம் மோதி இறந்ததால் அவரின் தந்தை திரு. பாலசுப்ரமணியன் என்பவருக்கு 50 ஆயிரம் ரூபாய்;

தஞ்சாவூர் மாவட்டம், ஊரணிபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரெங்கசாமி என்பவரின் மகள் ரஞ்சிதா, வாகனம் மோதி இறந்ததால் அவரின் தந்தை திரு.ரெங்கசாமி என்பவருக்கு 50 ஆயிரம் ரூபாய்;

காஞ்சிபுரம் மாவட்டம், மதுரா தச்சூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. எரோனிஸ், ஆரோக்கியசாமி ஆகிய இருவரும் மது அருந்தியதைத் தொடர்ந்து இறந்ததால் எரோனிஸின் மனைவி திருமதி பெர்னாத் என்பவருக்கு 50 ஆயிரம் ருபாய்; ஆரோக்கியசாமி என்பவரின் வாரிசுதாரரான விஜய் என்பவருக்கு 50 ஆயிரம் ரூபாய் ஆக மொத்தம் 1 லட்சம் ரூபாய்;

இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரிய கருப்பன் கோரிக்கையை ஏற்று, சிவகங்கை மாவட்டம், சாக்கவயல் கிராமத்தைச் சேர்ந்த திரு. கருப்பையா என்பவரின் மகள் இரம்யா இரு சக்கர வாகனம் மோதி ஏற்பட்ட விபத்தில் இறந்ததால், அவரின் தந்தை திரு.கருப்பையா என்பவருக்கு 50 ஆயிரம் ரூபாய் ;

–– எனப் பல்வேறு சம்பவங்களில் உயிரிழந்த 17 பேரின் குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து நிவாரண உதவியாக வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (24.8.2009) ஆணையிட்டுள்ளார்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.